Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Wisdom in *Thirukkural*

**Dr. G. Selvarakku,** Assistant Professor of Tamil, Thiagarajar College,
Madurai, Tamil Nadu. India.
ORCiD: https://orcid.org/0000-0002-5556-3041
**DOI: 10.5281/zenodo.6620946**

## Abstract

*In the article titled 'Wisdom in Thirukkural', the technique of knowledge which is the bulwark for man, the creation of enlightenment, and the specialties of the enlightened are explained in a way through Thirukkural. The virtues of controlling the mind and not letting it go where it is, freeing oneself from evil deeds and speaking good words, listening to good words and making good thoughts think are realized through the ideas taught by Thiruvalluvar. This article is about the depth of knowledge that refines man as a human being.*

**Keywords:** *Thirukkural*, World Literature, Wisdom.

## References

[1] P.S. Aasarya, *Thirukkural*, Narmatha Pathipagam, Chennai, 2020.
[2] Kalaga Release, *Pathinenkeelkanaku*, Naladiar Tirunelveli Saiva Sithantha Noorpathipagam, Chennai, 2007.
[3] C.Ganasayar, *Thokappiya Uraithogai* 3, Tamilmann Pathipagam, Chennai, 1943.
[4] Dr. K.V.Balasubramanian, *Poorananooru*, New Century Book House (P) Lt. Chennai 2004.
[5] Pathnenkeelkanaku 1, *Nanmanikadigai*, Manavar Pathipagam, Chennai, 2014.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# திருக்குறளில் அறிவுடைமை

**முனைவர் ஞா.செல்வராக்கு,** தமிழ்த்துறை, உதவிப் பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-5556-3041**
**DOI: 10.5281/zenodo.6620946**

**ஆய்வுச்சுருக்கம்**

*திருக்குறளில் அறிவுடைமை எனும் கட்டுரையில் மனிதனுக்கு அரணாகத் திகழும் அறிவின் நுட்பம், அறிவுடைமையின் ஆக்கம், அறிவுடையோரின் சிறப்புகள் போன்றவற்றை திருக்குறள் வாயிலாக விளக்கும் விதமாக அமைந்துள்ளது. மனதைக் கட்டுப்படுத்தி, அது சென்ற இடத்தில் செல்லவிடாமல், தீயசெயல்களில் இருந்து விடுபட்டு நல்வார்த்தைகளைப் பேசுதல், நற்சொற்களைக் கேட்டல், நற்சிந்தனைகளை நினைக்கச் செய்தல் எனும் நற் அறங்களை திருவள்ளுவர் போதிக்கும் கருத்துக்கள் மூலமாக உணர்த்தப்படுகின்றன. மனிதனை மனிதனாக செம்மைப்படுத்தும் அறிவின் ஆழ்ந்தகன்ற தன்மையினை எடுத்துரைக்கும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளன.*

**கருச்சொற்கள்:** திருக்குறள், உலக இலக்கியம், அறிவு, அறிவுடைமை.

**முன்னுரை**

உலக இலக்கியங்களுள் ஒப்பற்ற தனிப்பெரும் இலக்கியமாகத் திகழ்வது திருக்குறள். பதினென்கீழ்க்கணக்கு நூல்களில் தலைமையிடத்தை வகிக்கும் திருக்குறள், தமிழ் இலக்கிய வரலாற்றில் பேரிலக்கியமாகத் திகழ்கிறது. அறம், பொருள், இன்பம் என்ற மூன்றின் அடிப்படையில் அமைந்துள்ள திருக்குறளில் அறிவின் நுட்பம், அறிவின் இலக்கணம், அறிவுடைமை, அறிவுடையோரின் சிறப்பினை விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

**அறிவு – பொருள்**

அறிவு என்பதற்கு ஞானம், புத்தி, பொறியுணர்வு, அறியவேண்டியவை என்று பொருள் கொள்ளலாம். அறிதல் என்பதற்கு புதிதாய்க் கண்டுபிடித்தல் என்று விளக்கம் தருகின்றது கலைக்களஞ்சியம். நன்மையையும், தீமையையும் அறிந்து கொள்ளும் திறமே அறிவுடைமை ஆகும். மனிதனுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் உள்ள வேறுபாடு பகுத்தறியும் திறனாகும்.

**அறிவின் நுட்பம்**

ஒரு சமுதாயம் சிறந்து விளங்க வேண்டுமானால் அறிவாளர்களின் பங்களிப்பு இன்றியமையாதது. அறிவும் பண்பும் மனிதனுக்கு அரணாகத் திகழ்கிறது என்பதனை,

**“அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்**
**உள்ளழிக்க லாகா அரண்” (திருக்குறள் - 421.)**

என்கிறார் வள்ளுவர். அழிவு வராமல் காத்துக் கொள்ளும் தற்காப்பு அமைப்பு அரண் என்று வழங்கப்படும். புறத்தில் கல்லாலும், மண்ணாலும் அமைந்த அரணைப் பகைவர் புகுந்து அழித்துவிடுவார்கள். ஆனால் அகத்தில் என்றும் நீக்கமற நிறைந்திருக்கும் அறிவாகிய அரண் எவராலும்

அழிக்க இயலாது. திட்டமிட்டு செயல்பட்டால் பகைவரால்கூட அழிவு ஏற்படாது. பகைமையைத் தாக்கும் அரணாகத் திகழ்வது அறிவு என்று அறிவின் நுட்பத்தினை பகர்கிறார் வள்ளுவர்.

**அறிவின் இலக்கணம்**

மனிதனின் உள்ளமானது, தீய செயல்களில் இருந்து விடுபட்டு நல் வார்த்தைகளைப் பேசுதல், நற்சொற்களைக் கேட்டல், நற்சிந்தனையை நினைக்கச் செய்தல் போன்றவையே அறிவுடைமை என்பதனை,

**"சென்ற இடத்தால், செலவிடா தீதொரீஇ**
**நன்றின்பால் உய்ப்ப தறிவு" (திருக்குறள் - 422.)**

என்று மனத்தை அது போன போக்கிலே போகவிடாமல் தீமையிலிருந்து விலக்கி, நல்வழியில் போகச் செலுத்துவதே அறிவின் இலக்கணம் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். மேலும்,

யார் யாரிடம் என்ன பொருள் பற்றிக் கேட்டாலும், கேட்டதை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் அதிலுள்ள மெய்ப்பொருளைக் காண்பதே அறிவுடைமை ஆகும் என்பதனை,

**"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு" (திருக்குறள் - 423.)**

அந்த அறிவுத்திறன் இருந்தால், தான் கூறும் பொருளை எளிமையாகக் கேட்போருக்கு விளங்கும்படிக் கூறலாம். மற்றவர்கள் கூறுவதில் உள்ள நுண்ணிய பொருளையும் உணரலாம் என்பதிலிருந்து அறிவே மனிதனை உயர்த்தும் என்கிறது வள்ளுவம்.

**"கரும வரிசையால் கல்லாதார் பின்னும்**
**பெருமை யுடையாரும் சேறல் - அருமரபின்**
**ஓதம் அரற்றும் ஒலிகடல் தண்சேர்ப்ப!**
**பேதைமை யன்றுஅது அறிவு" (நாலடியார் - 249.)**

எனும் பாடல் சமூதாயத்திற்கு பயன்தரக்கூடிய செயலை இனிதே நிறைவேற்றுவதற்காக பெருமையுடையோரும் அறிவில்லார் பின் செல்வது அறிவுடைமை ஆகாது என்றும் நல்ல செயலுக்காக கல்லாதாருடன் கலந்து வாழ்தல் அறிவுடைமையாகும் என்கிறது நாலடியார்.

**அறிவுடைமை**

இயற்கையால் அறிவு பெற்றவர் மானுடர். "மக்கள் தாமே ஆறறிவினவே" என்று கூறிய தொல்காப்பியர், "பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" எனத் தேவர், அரக்கர், இயக்கர் போன்றோரும் ஆறறிவுடையோரே ஆவார் என்று வரையறுக்கின்றார். மேலும், மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் பொறிகள் வழியே பெரும் அறிவை அன்றி, மனத்தால் பெரும் அறிவை மாண அறிவு என்கிறார் தொல்காப்பியர். அறிவின் முக்கூறுகளான நுண்மை, மாண்மை, நுழைமை என்பதனை நுண்மான்நுழைபுலம் என்று சொல்லாட்சியாகக் குறிப்பிடுகின்றார். அறிவு நுட்பமானது; அறிவு விரிவானது; அறிவு ஆழமானது என்பதேயாகும். குண்டூசியும் ஆய்வுப்பொருளாகலாம். குன்றமும் ஆய்வுப் பொருளாகக் கொள்ளலாம். நுணுக்கத்தின் நுணுக்கமாகும் அறிவினை, மனம் போன போக்கெல்லாம் போகவிடாமல் தடுத்து நிறுத்தும் ஆற்றல வாய்ந்த ஆசானாகச் செயல்படுவதே அறிவின் திட்பம் என்கிறார் வள்ளுவர்.

**"கால்பார் கோத்து ஞாலத்தியக்கும்**
**காவற் சாகாடு கைப்போன் மாணின்**

**ஊறின் றாகி யாறினது படுமே**
**உய்த்தல் தேற்றா னாயின் வைகலும்,**
**பகைக்கூழ் அள்ளற்பட்டு**
**மிகப்பஃறீநோய் தலைத்தலைத் தருமே" (புறநானூறு – 185)**

வண்டியைச் செலுத்துவோன் தேர்ச்சி பெற்றவனாக இருந்தால், எந்தவொரு இடர்ப்பாடும் இல்லாமல் வண்டி செல்லும். ஆனால் அத்தன்மை இல்லாதவன் வண்டியைச் செலுத்தினால் நாள்தோறும் பகையாகிய சேற்றுக்குள் சிக்கி, பலப்பல இன்னல்களை ஏற்கும் எனும் கருத்தினை உற்று நோக்கும்போது ஊர்தியை அல்வழிநீக்கி நல் வழியில் செலுத்துவதே அறிவு என்பதனோடு மனித வாழ்வியலை ஒப்பு நோக்க முடிகிறது. வஞ்சகமும், சூதும், திருட்டும், கொள்ளையும், கொலையும் செய்வாருக்கு உரிய அறிவு தேர்ந்த அறிவா? என்றால் அழிவிற்குப் பயன்படக்கூடிய அதனை அறிவு என்று கூற முடியாது. இதனையே வள்ளுவனாரும்,

**"அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்**
**தன்நோய்போல் போற்றாக் கடை" (திருக்குறள் – 315)**

என்ற குறளில் பிற உயிர்களுடைய துயத்தைத் தனது துயரமாகக் கருதாதவன் கொண்டிருக்கும் அறிவு, அறிவாகாது என்றும் அதனை 'பாழாம் அறிவு' என்றும் குறிப்பிடுகின்றார்.

**அறிவுடையோரின் சிறப்பு**

அறிவு எனும் நிலையானது பிறர் நம்மீது மரியாதை செலுத்தும் வகையை ஏற்படுத்திக் கொடுக்கும் தன்மையைக் கொண்டதாகும். ஒரு தாய் தன் குழந்தையைப் பெற்றெடுக்கும் தருணத்தைக் காட்டிலும் சான்றோன் என்ற நிலையை அடையும் சூழலில் அத்தாய் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றாள் என்பதனை,

**"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்" (திருக்குறள் – 69)**

ஒரு தாய்க்கு பல பிள்ளைகள் இருந்தாலும் அனைவரிடத்திலும் ஒரே மாதிரியான அன்பைச் செலுத்துவாள் என்பது உலக இயல்பு.

**"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே**
**பிறப்புஓர் அன்ன உடன்வயிற் றுள்ளும்**
**பிறப்பின் பாலால் தாயும் மனம்திரியும்**
**ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்**
**மூத்தோன் வருக என்னாது அவருள்**
**அறிவுடையோன் ஆறு அரசு செல்லும்**
**கீழ்ப்பால் ஒருவன் கற்பின்**
**மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே" (புறநானூறு – 183)**

என்ற புறநானூற்றுப் பாடல் ஒரு தாய் தான் பெற்ற பிள்ளைகளில் அறிவுடையோன் பால் கூடுதல் அன்பைக் காட்டுவாள் என்ற கருத்தினைப் பதிவு செய்கின்றது. இதனையே,

**"ஒரு குடியில் பிறந்த கல்லாது மூத்தானைக் கைவிட்டு**
**கற்றான் இளமை பாராட்டும் உலகு" (நான்மணிக்கடிகை – 65)**

என்று நான்மணிக்கடிகை புலப்படுத்துகின்றது.

**முடிவுரை**

மனிதனை மனிதனாக செம்மைப்படுத்தி உயிர்ப்பிப்பது அரிது. அறிவின் நிலைப்பாடுகளையும் அறிவுடைமையால் உலகம் பயக்கும் சிறப்புகளையும் வரையறுத்த வள்ளுவனார் களவுக்குப் பயன்படும் அறிவினை காரறிவு என்றும், தன்னிடம் உள்ள குற்றத்தை அறிந்து மறைக்காதவர் ஆடையால், மான உறுப்புகளை மறைப்பது அறிவற்ற தன்மையாகும் என்றும் கூறி அத்தகைய அறிவினை புல்லறிவு என்றும் குறிப்பிடுகின்றார். அறிவுடையோர், பின் வருவனவற்றை முன்பே அறிந்து கொள்ளக்கூடியவர் வேறொன்றும் இல்லாவிட்டாலும் அறிவுடையோர் எல்லாம் வாய்க்கப் பெற்றவராகத் திகழ்வார் எனும் மனித வாழ்க்கை மேம்பட வழிவகை செய்த வள்ளுவர் கூறும் வாழ்வியல் நெறிமுறைகளைக் கடைப்பிடித்து வாழ்வில் நாமும் உயர்வோமாக.

**துணைநூற்பட்டியல்**

[1] பி.எஸ். ஆச்சார்யா (உ.ஆ) *திருக்குறள்*, நர்மதா பதிப்பகம், சென்னை –17, பதிப்பாண்டு 2020.

[2] கழக வெளியீடு. *பதினெண்கீழ்க்கணக்கு*, நாடியார், திருநெல்வேலி சைவ சிந்தாந்த நூற்பதிப்பகம் லிட், 522, ஆழ்வார்பேட்டை, சென்னை -18 பதிப்பாண்டு – டிசம்பர் 2007.

[3] சி.கணேசையர், *தொல்காப்பிய உரைத்தொகை* 3, தமிழ் மண் பதிப்பகம், எண் 2, சிங்காரவேலவர் தெரு, தியாகராயர் நகர், சென்னை – 17, முதற்பதிப்பு 1943.

[4] முனைவர் கு.வே.பாலசுப்பிரமணியன், *புறநானூறு*, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை – 98, முதற்பதிப்பு – ஏப்ரல் 2004.

[5] பதினெண்கீழ்கணக்கு 1, *நான்மணிக்கடிகை*, மாணவர் பதிப்பகம், சென்னை – 17 மறுமதிப்பகம் 2014.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.